[1974 ஏப்ரல் 10

தமிழ்நாடு பல் சிகிச்சை மருத்துவக் குழு

திரு. எஸ். வெள்ளபாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பல் சிகிச்சை மருத்துவக்குழு 1970-71-ல் மானியங்கள் வழங்கப்பட வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், தமிழ்நாடு பல் சிகிச்சை மருத்துவக் குழுவிற்கு மானியம் ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) & (உ) இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்காக தமிழ்நாடு பல் மருத்துவக் குழுவிடமிருந்து, அதன் வரவு செலவு குறித்த விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Ration Allowance to Nurses in Madras.

* 297 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to discontinue the ration allowance given to Nurses in Madras; and

(*b*) if so, the reasons therefor?

சென்னையிலுள்ள செவிலியருக்குப் பங்கீட்டுப் படி.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள செவிலியருக்கு வழங்கப்படும் பங்கீட்டுப் படியை நிறுத்திவிடுவதற்கான செயற்குறிப்புகள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை?

1974 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Upgrading of Junior Assistants in the Judicial Department as Assistants.

*298 Q.—THIRU C. R. KOLAPPA (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Second Tamil Nadu Pay Commission 1969-70 have recommended any upgrading of Junior Assistants in the Judicial Department as Assistants; and

(b) if so, the action taken thereon?

நீதித் துறையில் உள்ள இளநிலை உதவியாளர்களை உதவியாளர்களாகத் தரம் உயர்த்துதல்.

திரு. சி. ஆர். கோலப்பா (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) நீதித் துறையில் உள்ள இளநிலை உதவியாளர்களை, உதவியாளர் களாகத் தரம் உயர்த்தலாமென்று, 1969-70-ஆம் ஆண்டு, தமிழ்நாடு இரண்டா வது சம்பள ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளதா?

(இ) அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை. ஆனால் நீதித் துறையில் உள்ள 226 இளநிலை உதவியாளர்களை உதவியாளர்களாக பதவி உயர்த்துவதற்கு உயர்நீதி மன்றம் செயற்குறிப்பு ஒன்று அனுப்பியுள்ளது. இப்பொருள் பரிசீலனையில் உள்ளது.

Assistants Working in the Judicial Department.

*299 Q.—THIRU C. R. KOLAPPA (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether Assistants working in the Judical Department are required to wear black coats as their official uniform;

(b) whether representations have been received from their Union for the grant of an allowance towards this expenditure;